சிறப்பிதழ்
**Special Issue**

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி [தன்னாட்சி]
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி [மகளிர்]
வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

**19** பகுதி-3
Part -3

Scanned by TapScanner

# ஆத்தங்கரை ஓரம் நாவல் காட்டும் சமுதாய சிந்தனை

கு. ரஷ்யா
ஆய்வியல் நிறைஞர் மாணவி (முழுநேரம்), தமிழ் உயராய்வுத் துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
எளையாம்பாளையம், தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை:**

சமுதாயம் என்பது குடும்பம், பெண்கள் பற்றிய சிந்தனை, சமயம், கல்வி, பழக்கவழக்கம், காதல், இயற்கை இவைகளெல்லாம் இணைந்ததே ஆகும். இவை அணைத்தும் சமுதாயத்தின் ஒரு அங்கமாக விளங்குகிறது.

மனித வாழ்க்கையானது பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என்பதைக் கொண்டு இயங்குகிறது. மனித சமுதாயமானது இம்மூன்றும் இடையறாது தொடர்பு கொண்டு இருக்கிறது. எந்த ஒரு சமுதாயத்தையும் மாற்றுகின்ற ஆற்றல் இலக்கியத்திற்கு உண்டு எனலாம். அவ்வகையில், ஆத்தங்கரை ஓரம் நாவல் காட்டும் சமுதாய சிந்தனையை இக்கட்டுரையின் வாயிலாகக் காணலாம்.

**சமூகம்-விளக்கம்:**

சமூகம் என்பது பலதரப்பட்ட மக்களும் கூடி வாழும் ஒரே இடம். இதில், ஒருவனை ஒருவன் நன்கு புரிந்து கொண்டு தனக்கான தனிப்பாதையை வகுத்துக் கொண்டு மீண்டும் அந்த சமூக அமைப்பிற்குள்ள சுற்றி வளைத்து விடுகிறான்.

“சமுதாயம் என்பது பலவகைப்பட்ட வர்க்கங்களையும் சமூகக் குழுக்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட ஒரு சிக்கலான அமைப்பு”[1]

ஒரு சமூகத்தின் நிலைப்பாட்டினை புரிந்து கொள்வது என்பது மிகவும் கடினம். அந்த சமூகம் மனிதர்களின் மாற்றத்திற்கு ஏற்ப மாறிக்கொண்டு தான் இருக்குமே தவிர ஒரு நிலையான தன்மையை எப்பொழுதும் பெறாது எனலாம்.

“சமூக வாழ்க்கையை பற்றிய முழமையான அறிவை பெற குடும்பம், ஒழுக்கம், மதம், கல்வி அமைப்பு போன்ற நிறுவனங்களை ஆராய்தல் வேண்டும்.”[2]

**இலக்கியமும் சமூகமும்:**

“வாழ்க்கையில் மனிதர்கள் கண்டவை அவர்கள் கண்டு அனுபவித்தவை நாம் எல்லோர்க்கும் உடனடியாக நின்று கவர்ச்சி ஊட்டுபவை, எவையோ அவற்றைக் குறித்து அவர்கள் சிந்திப்பவை உணர்ந்தவை அவற்றைப் பற்றி அறிவிக்கும் உயிர்ப்பு மிக்க பதிவேடே இலக்கியம்.”[3] நாவலாசிரியர் தனது வாழ்க்கையில் பார்த்து உணரும் நிகழ்ச்சிகளை உருவம் கொடுத்து உணர்வு கொடுத்து ஒரு இலக்கியமாக வடிவமைக்கிறான்.

**விவசாயிகளின் நிலை:**

பச்சைபசேல் பயிர்கள், நெற்கதிர்கள், சத்து மிக்க காய்கறிகள், மணம் வீசும் பூக்கள், வாழை, தென்னை, மா, பலா என எண்ணற்ற பழ மரங்கள் கிராமங்கள் தோறும் செழித்தோங்கி இருக்கும். கால்நடைகள் இல்லாத விவசாய வீட்டை பார்க்க முடியாது என்றேக் கூறலாம்.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றுஎல்லாம்

தொழுது உண்டுபின் செல்பவர்”[4]

இந்நாவலில், சிந்தூர் கிராம மக்களுக்கு இயற்கையே தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். அவர்கள் அங்கு விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். அதில், வரும் பழங்கள், காய்களை வைத்து உண்டு வாழ்ந்து வருகின்றனர். சிந்தூர் கிராமம் அவ்வளவு அழகு நிறைந்ததாக



Scanned by TapScanner

காணப்படும். அதுமட்டுமல்லாது, அங்கு கம்பு, சோளம் போன்ற தானியங்களும் கிடைக்கும். இவ்வாறு இயற்கையான உணவுகளை உண்டு செழிப்புமாக வாழ்ந்து வருகின்றனர்.

"அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதைக் கூட யோசிக்காமல் அவர்களுக்குத் தாங்கள் சேகரித்து வைத்திருந்த தேனையும் மக்காச் சோளத்தில் சுட்டிருந்த மக்கி ரொட்டியையும், பருப்புக் கரைசலையும் பரிமாறி மகிழ்ந்தார்கள்."[5]

இவ்வாறெல்லாம், அவர்கள் யார் வந்திருந்தாலும் விருந்தோம்பல் என்ற ஒன்றைச் சிறப்பாக செய்துள்ளனர். இந்நாவலில் அணைக்கட்டுவதற்காக இம்மக்களை வெளியேற்ற வந்தவர்களையும் எதுவும் தெரியாமல் விருந்து அளித்து சிறப்பித்துள்ளனர்.

### அரசியல்வாதிகள்:

தற்போது நாடு அரசியல்வாதிகளின் கையில் சிக்கி கொண்டு தவிக்கின்றது. இன்றைய அரசியலின் நிலைமைகளை பா.விஜய் நன்கு புரிந்து அதை வார்த்தைகளாக வெளிப்படுத்துகின்றனர்.

"அரசியல் என்பது சதுரங்க பேரவை. அதில் ஒவ்வொரு ஜனநாயக குடிமகனும் காய்கள், யாரை எப்போது, எங்கே வீழ்த்த வேண்டும் வெட்ட வேண்டுமென்பது அந்த அரசியல் நரிகளுக்கு நன்றாகத் தெரியும்."[6]

இந்நாவலில், அமைச்சர் சுக்லா அணைக்கட்டுதல் தொடர்பாக எழுந்த பிரச்சனையில் அதனை எப்படி அடக்க வேண்டும் என்பதையே குறிக்கோளாக கொண்டு இருந்தார். அம்மக்களின் கவலைகளை அறிந்து அதனை தீர்க்க வேண்டும் என அவர்கள் நினைக்கவில்லை.'. மாறாக, அம்மக்களை எப்படி இங்கு இருந்து வெளியேற்றுவது என்பது பற்றியும் போராட்டம் நடத்தியவர்களை கண்டித்தும் வருகின்றனர்.

"கட்சித் தலைமை உங்களை ராஜ்ய சபா எம்பியா நியமிக்கலான்னு யோசிக்குது. உங்களோட சம்மதத்தைச் தெரிஞ்சிக்கத்தான் கூப்பிட்டேன்."[7]

இவ்வாறு இவர் போராட்டம் நடத்திய ராதா பஹனை கூப்பிட்டு கட்சியில சேர்ந்துக்கோங்கனு கேட்குறாங்க. ஏனெனில், அப்போது தான் இவர்களை வெளியேற்ற எளிமையாக இருக்கும் என்பதால் இம்முடிவினை எடுத்துள்ளார்கள்.

### குடும்பம்:

எந்த ஒரு பிரச்சனை என்றாலும் குடும்பத்தில் இருப்பவர்கள் ஒற்றுமையாக இருந்தால், அனைத்தையுமே வெல்லலாம் என்றுக் கூறலாம். அதில், அப்பா, அம்மா அண்ணன், தம்பி, தாத்தா, பாட்டி, மாமா, அத்தை என அனைவரும் இருந்தால் ஒரு குடும்பத்தை அழகாக வடிவமைக்க முடியும். அதுபோலத்தான், இந்நாவலில் கோவிந்த் பாயி சிமனுக்கு பெரும் உதவியாக இருந்தார் எனலாம். தன் மகனின் செயல் தன்னை பெருமைப்படுத்தும் விதமாக உள்ளது என்றுக் கூறுவார். அதுமட்டுமல்லாமல், தங்கள் கிராமத்தில் தங்கி தங்களுக்காக போராட வந்தவர்களையும் தங்களின் குடும்பத்தில் ஒருவராக நினைத்து அவர்களுக்கு உதவிகளையும் பாதுகாப்பும் அளித்தனர் எனலாம்.

"சிமன் சாப்புடுப்பா. எவ்வளவு நேரம் சாப்புடாமே இருப்ப எதுவா இருந்தாலும் சாப்புடாம இருக்கறதால என்ன பிரயோஜனம்?"[8] என சிமனை மிகவும் அன்பாகவும், அரவணைப்பாகவும் பார்த்துக் கொண்டார் என்றேக் கூறலாம்.

### அணைக்கட்டு:

சிந்தூர் கிராமத்திற்கு அணைக்கட்டுவதாக தாசில்தார் வந்து அறிவித்து சென்றார். இம்மக்களுக்கு வாழ்விடத்தின் ஆதாரமாகக் கொண்டு விளங்குகின்றனர். இவர்கள் இக்கிராமத்தை விட்டு செல்லுவதற்கு மனமில்லாமல், அணைக்கட்டை எதிர்த்து போராட ஆரம்பித்தார்கள். இந்த அணைக்கட்டால், இந்த கிராமத்தை சுற்றியுள்ள இயற்கை வளங்கள், பறவைகள் என அனைத்தும் அழிந்து விடும் என்ற பயம் அவர்களிடம் உள்ளது. இதனால், இங்கு சுற்றியுள்ள மற்ற கிராமங்களின் வாழ்வதாரம்



Scanned by TapScanner

அழியும் என்பதையும் பொருட்படுத்தாமல் அவர்களை அணையினை கட்டும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். இந்த அணையால் ஏற்பட்ட இழப்புகள் தான் அதிகம் எனலாம். அணைக்கட்டு முடிவதற்குள் வெள்ளம் வந்து அந்த கிராமமே அழிந்து விட்டது.

"உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எத்தனிக்கும் முயற்சியில் உடைமைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாக இழந்து விட்டார்கள். நிலம், பயிர், சேமிப்பு, கால்நடை என எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு அனாதைகளாக அவர்கள் நின்றார்கள்."[9]

முடிவுரை:

மனிதனின் சிந்தனைகள் எந்தெந்த கோணங்களில் வெளிப்படுகின்ற என்பதையும், சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளையும் சுட்டிக் காட்டியுள்ளனர். மனித சமுதாயத்தில் ஏற்படும் பல்வேறு இன்னல்களையும் மனிதனுக்கு மனிதனே அழித்துக் கொள்ளும் நிலையினையும் காணமுடிகிறது. அரசியல்வாதிகள் மக்களுக்கு பல உதவிகளைச் செய்தால், இன்னும் நல்லது நடக்கும் என்பதை இந்நாவலின் வழி உணரலாம்.

அடிக்குறிப்பு:


1. கவிஞர். வைரமுத்து, இரத்ததானம் ப - 10, சூர்யா லிட்டரேச்சர் (பி) லிட், சென்னை-600017
2. நா.செயப்பிரகாசம், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடு,ப-48
3. டாக்டர். மு.வரதராசனார், இலக்கியத்திறன், ப-10
4. டாக்டர். மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, கு.எண்-1033
5. வெ.இறையன்பு, ஆத்தங்கரை ஓரம், ப-5, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-600098.
6. பா.விஜய், பேச்சுலர் அறை, ப-11, குமரன் பதிப்பகம், 19 கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-600017.
7. வெ.இறையன்பு, ஆத்தங்கரை ஓரம், ப-73, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-600098.
8. மேலது, ப-16.
9. மேலது, ப-192.


௸



Scanned by TapScanner